DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 3 நுசரத்** |
| Father's Name | அக்பர் |
| Village | மேல்களவாய் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 15/11/2024

**முதல் விசாரணை**

நான் வீட்டு குடுத்தனமாக உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவர், அ.சா.2 எனது கணவரின் தம்பி. 2 வருடத்திற்கு முன்னர் புகார் கொடுக்கப்பட்டது. என் மச்சினருக்கும், அவரது மனைவிக்கும் குழந்தை இல்லாததால் பிரச்சனை அதனால் அவரது மனைவி எதிரிகளிடம் சென்று சொன்னதின் அடிப்படையில் எதிரிகள் வந்து எங்களை தாக்கிவிட்டார்கள். அதில் எனது கணவருக்கும், அவரது மச்சினருக்கும் காயம் ஏற்பட்டது. என் மச்சினர் மயக்கமாகிவிட்டார். என் கணவர் தட்டுதடுமாறி வந்து என்னிடம் வந்துசொன்னார் நான் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னேன். ஆம்புலன்சில் செஞ்சி அரசு மருத்துவமனை முதல்உதவி சிகிச்சைக்கு பின் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என் கணவரிடம் மட்டும் வாக்குமூலம் பெற்றார்கள். என் மச்சினருக்கு சுயநினைவு திருமபியவுடன் வாக்குமூலம் வாங்கினார்கள். இது சம்மந்தமாக என் கணவர் புகார் கொடுத்தார். புகார் கொடுத்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

உங்கள் கணவர் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் ஏற்கனவே

முன்விரோதம் இருந்துவந்தது என்றால் சரிதான். உங்கள் கணவருக்கும் உங்கள் மைத்துனருக்கும் எற்பட்ட காயம் எங்கள் வீட்டிற்கு வந்து சொன்ன பிறகு தான் தெரியும் என்றால் சரிதான். அவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதன்பிறகு நான் சம்பவ இடம் சென்றேன். அனிபா நீங்கள் செத்து ஒழிங்கடா என்று என் மைத்துனர் அமீர்பாஷா மீதும், வண்டியின் மீதும் கல் தூக்கி அடித்தார்கள். என் மச்சினர் விட்டுவிடும்படி கெஞ்சினார். முதல்விசாரணையில கூறியதை தான் போலிஸ் விசாரணையிலும் கூறினேன்.

எத்தனை மணிக்கு செஞ்சி மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் 8.00 மணிக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். என் கணவர் தட்டுதடுமாறி வந்தார். பாதி சுயநினைவில் இருந்தார். எத்தனை நாட்கள் கழித்து சுயநினைவு திரும்பியது என்றால் 3, 4 மணிநேரம் கழித்து சுயநினைவு திரும்பியது. என் மைத்துனர் 1 வாரகாலம் விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார். என் கணவர் 3 நாட்கள் விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார். மருத்துவமனையில் போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. அதன்பிறகோ அல்லது இன்றைய தேதிவரை போலிசார் உங்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. என் மைத்துனர் மற்றும் என் கணவர் ரத்துகறை படிந்த உடைகளை போலிசாரிடம் ஒப்படைத்தோம். சேதம் அடைந்த வாகனத்தை போலிசே காவல்நிலையம் எடுத்துசென்றுவிட்டார்கள் அதன்பிறகு காவல்நிலையம் சென்று வாகனத்தை பெற்றுக்கொண்டோம்.

அனீபா கல்லால் செத்து ஒழிங்கடா, அமீர்பாஷா மீதும், வண்டியின் மீதும் கல்லை தூக்கி போட்டார்கள் என்றும் மைத்துனர் கெஞ்சினார் என்று கூறுவதும் அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. உங்கள் கணவருக்கும், உங்கள் மைத்துனருக்கும் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதால் விழுந்து ஏற்பட்ட காயங்கள் என்றாலும், எதிரிகள் மீது ஏற்கனவே இருந்த முன்விரோதத்தால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.